173/185

<u>நகர் ஊரமைப்புத் துறை</u>

அனுப்புநர்

திரு.S.சங்கரமூர்த்தி,பி.இ.,
இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
காஜாமலை மெயின்ரோடு,
காஜாமலை,
திருச்சிராப்பள்ளி–23.
E.mail : ad.try.region@gmail.com
Web : tn.gov.in/dtcp

பெறுநர்

1. ஆணையாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. தமிழ்நாடு மின் பகிர்மானக்கழகம்,
திருச்சிராப்பள்ளி.

---

ந.க.எண்.518/2020 திமா3 நாள். 05.10.2020

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – ஸ்ரீரங்கம் கோட்டம் – வார்டு எண்– எ, பிளாக் எண்– 25, நகரளவு எண்.929/4–ல் கட்டுப்பட்ட 0.82 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கிட – திருத்திய சாலை அமைப்பு வரைபடத்தின்படி தானமாக பெற நடவடிக்கை எடுக்கத் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை
1 மனுதாரரின் கடிதம் நாள்.11.03.2020.
2 அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
3 நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/2010எல்ஏ2 நாள்.20.12.2010.
4 நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012எல்ஏ2 நாள்.19.4.2012.
5 நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.10433/2012எல்ஏ2 நாள்.22.6.2012.
6 நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019பிஏ2, நாள்.07.03.2019.
7 நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019பிஏ2, நாள். 05.02.2020.

- - - -

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – ஸ்ரீரங்கம் கோட்டம் – வார்டு எண்– எ, பிளாக் எண்– 25, நகரளவு எண்.929/4–ல் கட்டுப்பட்ட 0.82 ஏக்கர் பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் விபரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 6–ல் கண்டுள்ள சுற்றறிக்கையில் வரிசை எண்.g–ல் அளிக்கப்பட்ட அதிகார பகிர்வின் படியும் மற்றும் பார்வை 7–ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும் TNCDBR-2019 விதி எண்.47 (6)–ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவின் பூங்கா ஒதுக்கீடான 221.00 ச.மீ இடத்திற்கு மாற்றாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டின்படி கட்டணத்தினை அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதால், பூங்கா ஒதுக்கீடு இன்றி திருத்திய சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

B.T

திருத்திய சாலை அமைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள உத்தேச சாலைகளை TNCBDR-2019 விதிகளின்படி வட்டார வளர்ச்சி அலுவலரால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் சாலை அமைக்கப்பட வேண்டும். அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரப்படல் வேண்டும்.

பார்வை 4–ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள், சாலை விஸ்தரிப்பு, மூலை முடக்கு பகுதி, பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை ஆகியவற்றினை தானமாக வழங்கும்போது தானபத்திரத்தில் ஒவ்வொரு சாலைக்கும் எண்ணிட்டு சாலையின் நீளம் மற்றும் அகலம் அளவுகள் மற்றும் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகளை குறிப்பிட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பரப்பளவுடன் வரைபட நகலை இணைத்து பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஆவணமாக பதிவு செய்தல் வேண்டும்.

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் மனைப்பிரிவு எல்லை வரை (Upto the end of boundary) அமைக்கப்பட்டுள்ளதா என்பதை நேராய்வு செய்து உறுதி செய்து கொண்டு தான பத்திரத்தில் ஆணையாளரின் கையொப்பமிட்டு பத்திரம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

பார்வை 5–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் சாலை விஸ்தரிப்புகள் ஆகியவை தார்சாலைகளாக எல்லை வரை அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான புகைப்படம் எடுத்து இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு பதிவு செய்யப்பட்ட தான பத்திர நகல், (நோட்டரி பப்ளிக் அத்தாட்சியுடன் கூடியது) மற்றும் மன்ற தீர்மானம் ஆகியவற்றினை இவ்வலுவலக மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

05/10/20

<u>இணைப்பு:</u>
சாலை அமைப்பு வரைபட நகல் } –2

<u>நகல்–</u>
B.திலகம்,
1/1, BTS இல்லம்,
AIBEA காலணி, ஸ்ரீராம் அவென்யூ,
திருச்சிராப்பள்ளி.

B. Thi

178/184

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.சு.சிவசுப்பிரமணியன், பி.எஸ்சி., பி.எல்,

ந.க.எண். எப்1/609/2020/ஸ்ரீ நாள்: 09.11.2020

பொருள் : மனைப்பிரிவு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம், மேலூர் கிராமம், வார்டு A, பிளாக் எண் 25, நகரளவு எண் 929/4, மேலூர் சாலையில் 0.82 ஏக்கர் (3288 ச.மீ.) பரப்பளவில் அமையும் புதிய உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டது – அங்கீகாரம் செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை 1. மனுதாரர் திருமதி. B.திலகம், திருச்சி என்பவரது விண்ணப்பம், நாள் 29.01.2020
2. இதே எண் கொண்ட இவ்வலுவலகக் கடிதம், நாள் 31.08.2020
3. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் கடித எண் 518/2020/திமா3, நாள் 21.10.2020
4. தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் ஒப்புதல், நாள் 03.11.2020

*****************

**உத்தரவு:**

பார்வை (3)ல் காணும் இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் உத்தரவில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், மேலூர் கிராமம், வார்டு A, பிளாக் எண் 25, நகரளவு எண் 929/4, மேலூர் சாலையில் 0.82 ஏக்கர் (3288 ச.மீ.) பரப்பளவு கொண்ட இடத்தில், புதிதாகக் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க **மவ/ந.ஊ.இ.இ. (திமா) எண் 10/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதலும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு **59/2020** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வுத்தரவில் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுக்கான நிபந்தனைகள், வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மனுதாரரின் விண்ணப்பத்துடன் இணைத்துப் பெறப்பட்ட ஆவண எண் 2272/2020, நாள். 09.10.2020ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திர அசல் பெறப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட அனுமதி உத்தரவு அங்கீகரிக்கப்படுகிறது.

**கூடுதல் நிபந்தனைகள்:**

1. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண் 518/2020 திமா3, நாள் 21.10.2020ம் தேதிய செயல்முறையில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.
2. குடியிருப்பு மனைகளில் கட்டிடம் கட்டும் முன் சாலை மட்டத்திற்கு மனையில் மண் நிரப்பி உயர்த்தப்பட வேண்டும்.

B.Thi

144/188

3. குடியிருப்பிற்காக ஒதுக்கப்பட்ட மனையில் குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். கடைக்காக ஒதுக்கப்பட்ட மனையில் கடை கட்டிடம் மட்டுமே கட்டப்பட வேண்டும். மாநகராட்சி சட்டப்படி உரிய விண்ணப்பங்கள் சமர்ப்பித்து கட்டிட மற்றும் திட்ட அனுமதி பெற்ற பின்பே கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள், மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டதால் மனுதாரர் இவ்விடத்தில் எவ்வித உரிமையும் கோர இயலாது.

5. மனைப்பிரிவு வரைபடத்திலுள்ள அளவுகளின்படி தான் மனைகள் கிரயம் செய்யப்பட வேண்டும்.

6. மனை அபிவிருத்தி காலத்தில் மழைநீர் சேமிப்பு அமைப்பு தவறாமல் செய்யப்பட வேண்டும்.

7. மனைப்பிரிவு தெருவிளக்குகள் தொடர்பாக மாநகராட்சியில் செலுத்திய தொகைக்கு மேல் மின்வாரியத்தால் கூடுதல் தொகை நிர்ணயம் செய்யப்பட்டால் அந்த கூடுதல் வித்தியாச தொகையையும் செலுத்த வேண்டும்.

8. மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து உரிய அனுமதி பெற்று கட்டிடம் கட்டும் வரை காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவில் மழைநீர் வடிகால் அமைப்புகள் மாநகராட்சி பொறியாளர்கள் ஆலோசனைபடி செய்ய வேண்டும்.

10. மாநகராட்சி அனுமதி இல்லாமல் எவ்வித மாறுதல் மற்றும் பாதையினை மறித்து கதவு (Gate) அமைக்கக் கூடாது.

9/11/2020

ஆணையருக்காக
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

09/11/2020

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்
திருமதி. B.திலகம்,
1/1 - BTS இல்லம் AIBEA காலனி,
ஸ்ரீராம் அவின்யூ, திருவானைக் கோவில், திருச்சி – 620 005.

B.Thi

நகல்: உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி